DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.T.C. No. 880/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-7 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.சுதர்சன் |
| Father's Name (or) Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(Accused present.).

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 03.11.2023

---

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மண்டலமாணிக்கம் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2. கடந்த 08.09.2021ம் தேதி 10.30 மணிக்கு எஸ்.பி.பட்டிணம் காவல்நிலையத்தில் பெண் முதல்நிலை காவலர் ரேகா பாரா பொறுப்பில் இருந்த போது வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தெரசாள் அளித்த புகார்மனுவை பெற்று மனு ரசீது எண் C.S.R 156/2021 வழங்கி புகார்மனுவை விசாணைக்காக எனது வசம் ஒப்படைத்தார்.

3. நான் மேற்படி புகார்மனுவை பரிசிலித்து 15.09.2021ம் தேதி 14.15 மணிக்கு நிலைய குற்ற எண்.144/2021ல் எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 324, 448, 427, 506(ii)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. பின் வழக்கினை எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 15.09.2021ம் தேதி 15.15 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் புஷ்பம், சந்தானம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ 3, மாதிரி வரைபடம் அ.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. பின் அன்றைய தினமே வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தெரசாள் அ.சா.2 சிங்காரம், அ.சா.3 ஞானபிரகாசம், அ.சா.4 சோபியா, அ.சா.5 ஜெயா, அ.சா.6 மதிவாணன் மற்றும் சாட்சிகள் புஷ்பம், சந்தானம், முதல்நிலை காவலர் ரேகா ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் மாண்புமிகு இராமநாதபுரம் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டபடியால் கைது செய்யப்படவில்லை.

6. பின் வழக்கின் புலன் விசாரணையின் அடிப்பைடையில் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகளான 294(b), 324, 448, 427, 506(ii) இ.த.ச

விலிருந்து 294(b), 323 இ.த.ச வாக சட்டப்பிரிவு மாறுதல் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் **(அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**.

7. பின் வழக்கின் புலன் விசாரணை முடித்து 26.09.2021ம் தேதி எதிரி மீது இதச பிரிவுகள் 294(b), 323ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. அ.சா.1ற்கும் எதிரிக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து பேசிக்கொள்ள மாட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் தொடர்பாக எதிரி அ.சா.1ன் மீது புகார் அளித்து அது காவல் நிலையத்தில் MF செய்யப்பட்டது என்றால் சரிதான்.

2. அ.சா.1 அளித்த புகாரை சரிவர விசாரிக்காமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. வழக்காவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கை சரிவர விசாரணை செய்யாமல் அவசர கதியில் குற்ற இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.